# சிறுவர் கதைகள்




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பொருளடக்கம்


| கதை | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | சிங்கமும் எலியும் | 01 |
| 2. | குரங்கும் குல்லாயும் | 04 |
| 3. | ஏமாந்த காகம் | 07 |
| 4. | சிங்கம் - நரி - கழுதை | 09 |
| 5. | ஆமையும் முயலும் | 12 |
| 6. | புத்தி புகட்டிய குருவி | 15 |
| 7. | கர்வம் கொண்ட முயல் | 18 |
| 8. | கை நழுவிய கோடாரி | 21 |
| 9. | தங்க வாத்து முட்டை | 24 |
| 10. | தாகம் தீர்ந்த காகம் | 27 |

# சிங்கமும் எலியும்



ஒருநாள் சிங்கம் காட்டில் உண்ட களைப்பில் தூங்கிக்கொண்டு இருந்தது. அப்பொழுது எலி ஒன்று அங்கு வந்தது. சிங்கத்தைப் பார்த்ததும் அதற்கு ஒரு சின்ன எண்ணம் வந்தது. இந்த காட்டிற்கு ராஜாவான சிங்கத்தின் மீது ஏறி அமர்ந்தால் என்ன? உடனே சிங்கத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டது. சிங்கம் கண் விழித்து காடு அதிர கர்ஜித்தது. சிங்கத்தின் கர்ஜனையில் எலி நடுங்கிக்கொண்டு நின்றது. கோபத்துடன் சிங்கம் எலியைப் பார்த்தது. எலி! சிங்கத்திடம், என்னை மன்னியுங்கள் என்னைக் கொன்று விடாதீர்கள் நான் தெரியாமல் தவறு செய்துவிட்டேன். இப்பொழுது என்னை கொல்லாமல் விட்டால் உங்களுக்குத் தக்க சமயத்தில் நான் உதவுவேன் என்றும் கூறியது. சிங்கம் நீ எனக்கு உதவப்போகிறாயா? என்று சிரித்துக்கொண்டே சென்றது. சில நாட்கள் சென்றன.

ஒரு நாள் எலி பூனைக்குப் பயந்து ஓரிடத்தில் பதுங்கிக்கொண்டு இருந்தது. அப்போது சிங்கத்தின் முழக்கம் அலறலாகக் கேட்டது. சிங்கம் ஏதோ ஆபத்தில் இருப்பது போல் அந்த சத்தம் இருந்தது. எலி சிங்கத்தின் முழக்கம் வரும் திசை நோக்கி ஓடியது. சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொண்டு இருந்தது. எலி உடனடியாக செயல்பட்டது. வலையைத் தன் கூரிய பற்களால் கடித்து கடித்துப் போட்டது. சிங்கமும் முயற்சி செய்து வலையிலிருந்து வெளியே வந்தது. சிங்கத்திற்கு மிகுந்த மகிழ்ச்சி தன்னைக் காப்பற்றிய எலியைத் தூக்கித் தன் முதுகில் வைத்துக்கொண்டது, அன்றிலிருந்து எலியும் சிங்கமும் நண்பர்களாயினர்.

* * *



# குரங்கும் குல்லாயும்




ஆலமரத்தில் குரங்குக் கூட்டம் ஒன்று வசித்தது. பழங்களைத் தின்றும் கிளைக்கு கிளைக்குத் தாவியும் அவை மகிழ்சியாக இருந்தன. ஒருநாள் மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டு வியாபாரி ஒருவன் வந்தான். ‘அப்பா!... என்ன.. வெயில்... சிறிது இந்த மரத்தில் ஓய்வெடுக்கலாம்.’ என்று எண்ணிக் கொண்டு மூட்டையைத் தலைக்கு வைத்துக் கொண்டு தூங்கிப்போனான்.

மேலே இருந்த குரங்குகள் இதைப் பார்த்துக்கொண்டு இருந்தன. சிறுது நேரம் கழித்து குரங்குகள் கிழே இறங்கின. வியாபாரியின் மூட்டையைப் பிரித்துப் பார்த்த குரங்குகளுக்கு மிகுந்த சந்தோசம். மூட்டைக்குள் பல வண்ணங்களில் குல்லாய்கள் இருந்தன. குரங்குகள் தங்களுக்குப் பிடித்த வண்ணக் குல்லாய்களைத் தலையில் மாட்டிக் கொண்டன. குல்லாய் அணிந்த மகிழ்ச்சியில் அங்கும் இங்கும் குதித்தன. சத்தம் கேட்ட வியாபாரி தூக்கத்திலிருந்து விழித்தான். குரங்குகள் குல்லாய்களுடன் இருப்பதைப் பார்த்தான். ‘ஏ!.. என்.. குல்லாய்! அதைக் கொடு’ என்று பல முறை கேட்டு குரங்குகளை விரட்டினான். குரங்குகள் குல்லாய்களைக் கொடுக்காமல் அங்கும் இங்கும் ஓடியது. களைத்துப்போன வியாபாரி சிறிது நேரம் சிந்தித்தான். அவனுக்கு ஒரு யோசனை வந்தது. தன் தலையில் இருந்த குல்லாயைத் தூக்கி எறிந்தான் குரங்குகளும் தன் தலையில் இருந்த குல்லாய்களைத் தூக்கி எறிந்தன. வியாபாரி குல்லாய்களை எல்லாம் எடுத்து மூட்டையாகக் கட்டிக்கொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

* * *



# ஏமாந்த காகம்




ஒரு கிராமத்தில் பாட்டி ஒருவர் வடை சுட்டு வியாபாரம் செய்து வந்தார். ஒருநாள் காகம் ஒன்று பாட்டிக்குத் தெரியாமல் வடையை எடுத்துக் கொண்டு பறந்து சென்றது. பறந்து சென்ற காகம் ஒரு மரத்தின் மேல் அமர்ந்து வடையை உண்ணத்தொடங்கியது. அப்பொழுது அவ்வழியாக வந்த நரி காகத்தின் வாயில் உள்ள வடையைப் பார்த்தது. நரிக்கு அந்த வடையை உண்ண ஆவலாக இருந்தது. நரி ஒரு தந்திரம் செய்தது. காகத்தைப் பார்த்து நரி, நீ நன்றாக பாடுவாயே! எங்கே எனக்காக ஒரு பாட்டு பாடு என்றது தன்னை நரி புகழ்ந்த மகிழ்ச்சியில் காகம் வாயில் உள்ள வடையினை மறந்து கா!.. கா!.. என பாடியது. காகம் பாடத் தொடங்கியதும் வடை கீழே விழுந்தது. நரி வடையை எடுத்துக் கொண்டு ஓடி விட்டது. காகம் ஏமாந்து போனது.



* * *

# சிங்கம் - நரி - கழுதை



ஓர் காட்டில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டுக்கு சிங்கம் அரசனாக இருந்தது. சிங்க இராஜாவிற்கு கழுதையும், நரியும் மந்திரிகளாக இருந்தனர். ஓர் நாள் இரவு நேரத்தில் விலங்குகளின் நிலைமையை அறிய சிங்கம் தன்னோட இரண்டு மந்திரிகளையும் அழைத்துக்கொண்டு மாறுவேடத்தில் சென்றது. அவ்வாறு செல்லும்போது திடீரென ஏதோ மிருகத்தின் கூக்குரல் அதிகமாக கேட்டது. மூன்று பேரும் மிகவும் பயந்து நடுங்கினார்கள். அய்யய்யோ! நமக்குத் தெரியாமல் ஒரு மிருகம் காட்டில் நுழைந்து விட்டது என்று நினைத்துக்கொண்டு வேகமாக ஓடி ஒரு மல்லிகைத் தோட்டத்தில் ஒளிந்து கொண்டார்கள். சிறிது நேரம் அமைதியாக இருந்தார்கள். அதன் பிறகு எந்த மிருகத்தின் கூக்குரலும் கேட்கவில்லை. பிறகு மூன்று பேரும் இனிமேல் நமது உயிருக்கு ஆபத்து இல்லை என்று புரிந்து கொண்டார்கள். அவர்களுடைய பயமும் நீங்கியது.. அப்பொழுது கழுதை, இராஜா!, ஏதோ ஒரு மணம் வருகிறதே! என்று கூறியது. உடனே சிங்கம், ‘ஆமாம் அது! என்ன மணம் என்றால்!.. அரளிப்பூவின் மணம்’ என்று கூறியது. உடனே கழுதை ‘இது அரளிப் பூவின் மனம் இல்லை. இது மல்லிகையின் மனம்’. என்று கூறியது. என்ன! மல்லிகையின் மனமா! இராஜாவையே எதிர்த்துப் பேசுகிறாயா! உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று கூறிக்கொண்டு சிங்கம் கழுதையின் கழுத்தைப் பிடித்தது. உடனே கழுதை ‘என்னை மன்னியுங்கள் வேண்டுமானால் நரியிடமே கேளுங்களேன்’ என்று கழுதை கூறியது. ‘என்ன நரியாரே இது மல்லிகையின் மணமா? அரளியின் மணமா?’ என்று நரியிடம் கேட்டது சிங்கம்.

அதற்கு நரி 'எனக்கு இரண்டு நாட்களாக மூக்கில் சளி பிடித்து விட்டது. அதனால் இது என்ன மணம் என்று நுகர முடியவில்லை'. என்று கூறியது. சிங்கம் உடனே சிரித்தது. 'சாதுரியமாக பதில் கூறிவிட்டாயே' இது மல்லிகையின் மணம்தான். கழுதை சரியாகத் தான் சொன்னது 'நான்தான் விளையாட்டாக கூறினேன்'. என்றது சிங்கம். பின் மூவரும் சிரித்துக் கொண்டே சென்றார்கள்.

* * *



# ஆமையும் முயலும்



ஒரு காட்டில் முயல் ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் கர்வம் கொண்டது. ஒருநாள் அதற்கு மிகவும் தாகமாக இருந்தது. அருகில் உள்ள குளத்திற்குச் சென்று தண்ணீரைக் குடித்து தாகத்தைத் தணித்துக் கொண்டது. அப்பொழுது அங்கே ஆமை ஒன்று மெதுவாக ஊர்ந்து வந்ததைப் பார்த்த முயல், ஆமையை ஏளனம் செய்தது. ஆமையைத் தன்னுடன் ஓட்டப்போட்டிக்கு வருமாறு முயல் அழைத்தது. ஆமை சிறிது நேரம் யோசித்து பின் ஓட்டப்போட்டிக்கு சம்மதித்து. ஆமையும் முயலும் ஓட்டப்போட்டிக்கான நாளையும் இடத்தையும் தேர்வு செய்தன. இரண்டும் ஓட்டப்போட்டி க்கு ஆயத்தமாக நின்றன. முயல் வேகமாக ஓடியது. ஆமை நிதானத்துடன் வந்து கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றவுடன் முயல் ஆமை வெகு தொலைவில் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தது. முயல், ஆமை வருவதற்குள்சிறிது நேரம் ஓய்வெடுக்க எண்ணி மரத்தடியில் தூங்கியது. ஆமை மெதுவாக முயல் தூங்கிய இடத்தைக் கடந்து எல்லைக் கோட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. கண் விழித்த முயல், ஆமை எல்லைக்கோட்டை நெருங்குவதைப் பார்த்தவுடன் வேகமாக ஓடியது. அதற்குள் ஆமை எல்லைக்கோட்டை அடைந்து வெற்றி பெற்றது. முயல் ஆமையைக் கண்டு தலை குனிந்தது.

* * *




# புத்தி புகட்டிய குருவி



ஓர் காட்டில் யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த யானை அனைத்து விலங்குகளிடமும் நான் தான் பலசாலி என்று கூறிக்கொண்டே இருந்தது. அனைத்து விலங்குகளுக்கும் இயல்பாகவே யானை பலசாலி என்று தெரியும். ஆனாலும் இந்த யானை ஏன் நான் தான் பலசாலி என்று கூறிக்கொண்டே இருக்கிறது என்று அனைத்து விலங்குகளும் வருத்தத்துடன் பேசிக்கொண்டன. ஓர் நாள் யானை நடந்து வந்து கொண்டிருந்தது. அப்பொழுது மரத்தில் குருவி ஒன்று இருந்தது. அந்த மரத்தை யானை உலுக்கியது. உடனே குருவி யானையே நீ மரத்தை உலுக்கினால் நான் கீழே விழுந்து விடுவேன், அதனால் மரத்தை உலுக்காமல் இரு என்று கூறியது. அதற்கு யானையோ நான் மிகுந்த பலசாலி, அதனால் மரத்தை உலுக்கத் தான் செய்வேன் என்று கூறியது. குருவி, என்ன நீ பலசாலியா? உன்னை விட நான் தான் பலசாலி' என்று குருவி கூறியது. யானை, என்ன? நீ பலசாலியா? எப்படி அதை நீ நிரூபி என்று கூறியது. அதோ அந்த மலையிலிருந்து இந்த மரம் வரைக்கும் நம் இரண்டுபேரில் யார் முதலில் வருகிறார்களோ அவர்களே பலசாலி என்று முடிவுசெய்யலாம் என்று குருவி கூறியதும். யானை சிறிதும் யோசிக்காமல் சரி என்றது. போட்டி ஆரம்பமானதும் குருவி முதலில் பறந்து வந்து மரத்தை அடைந்தது. யானை மெதுவாக வந்தது. யானை, நான் தான் பலசாலி என்று நினைத்தேன். ஆனால் நீ எப்படி முதலில் மரத்தில் வந்துவந்து அமர்ந்தாய் என்றதும், குருவி, பார்த்தாயா நான் தான் உன்னை விட பலசாலி என்றது. யானை யோசித்துக்கொண்டே இருந்தது. அப்பொழுது குருவி, உனக்கு மரத்தை முறிக்கும் வலிமை இருப்பது போல் எனக்கு பறக்கும் வலிமை இருக்கிறது. அனைவரிடமும் ஏதாவது ஒரு திறமை இருக்கும்.

அதனால் யாரையும் திறமை இல்லை என்று ஏளனம் செய்யக்கூடாது என்று கூறி புத்திகற்பித்தது. அன்று முதல் யானையும் குருவியும் நண்பர்களாக இருந்தனர்.

* * *




# கர்வம் கொண்ட முயல்




ஒரு காட்டில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தில் குட்டி முயல் ஒன்று வசித்து வந்தது. குட்டி முயலுக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை, என்றாவது ஒருநாள் தந்திரமுள்ள நரியைத் தன் அறிவினால் வெல்ல வேண்டும் என்று. இதனை எல்லோரிடமும் சொல்லித் தன் அறிவுக்கூர்மையை நிருபிப்பேன் என்று சவால் விடும். பிறர் கூறும் அறிவுரையை ஏளனம் செய்யும் இப்படியாக சில நாள் சென்று கொண்டு இருந்தது. ஒருநாள் நரியின் ஊளைச்சத்தத்தைக் கேட்டது. உடனே சத்தம் கேட்ட திசை நோக்கி ஓடியது. அங்கு நரி ஒன்று பள்ளத்திலிருந்து வெளியே வர முடியாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. என்ன! நரியாரே உன் தந்திரம் பலிக்கவில்லையா? என்று ஏளனமாகக் கேட்டது. மேலும் நரியின் நிலைமையைக் கண்டு முயல் சிரித்து. நரி கோபத்தை அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தது, நரி ஒரு திட்டம் தீட்டிக் கொண்டது. அதன்படி தரையில் காதை வைத்து எதையோ கேட்பது போல் பாசாங்கு செய்தது. என்ன கேட்கிறாய்? என்று முயல் கேட்டது. ம்ம்... இங்கே கடவுளின் குரல் கேட்கிறது, கடவுள் பேசுகிறாரா? ஆமாம் இந்த உலகத்திலே ஒரு முயல் தான் அறிவாளியாம்! எந்த முயல்? அதைத்தான் சரியாகக் கேட்க முடியவில்லை. உன் அருகில் உள்ள கம்பை குழிக்குள் இறக்கு. நான் பள்ளத்தைப் பெரியதாக்கிக் கேட்கிறேன் என்றது. முயல் கம்பை கீழே இறக்கியது. நரி ஒரே தாவலில் கம்பின் வழியாக பள்ளத்திலிருந்து வெளியே வந்தது. முயல் ஓடுவதற்குள் நரி முயலைப் பிடித்துக் கொன்றது.

* * *



# கை நழுவிய கோடாரி



ஒரு கிராமத்தில் தங்கமணி, சின்னமணி என்ற இரு நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் மரம் வெட்டும் தொழிலை செய்து வந்தனர். ஒரு நாள் தங்கமணி மரம் வெட்டும்போது அவனது கோடாரி கைநழுவி ஏரியில் விழுந்தது. கோடாரி ஏரியில் விழுந்ததும் ஓவென்று அழுதான். அலறலைக் கேட்டு அவன் முன் தேவதை தோன்றினாள். யார் நீ? எதற்காக இப்படி அழுகிறாய்? என் பெயர் தங்கமணி என் கோடாரி ஏரியில் விழுந்து விட்டது. நான் உனக்கு உதவி செய்கிறேன் என்று தேவதை ஏரிக்குள் சென்றது. சில நிமிடங்களுக்குப் பின் இதோ உன் கோடாரி! இல்லை! இல்லை! இது தங்கக்கோடாரி என்னுடையது அல்ல. மீண்டும் தேவதை ஏரியினுள் சென்று வெள்ளிக்கோடாரியுடன் வந்தது. இதுவும் இல்லை' என்றான்தங்கமணி. மீண்டும் ஏரியினுள் சென்ற தேவதை இரும்புக்கோடாரியுடன் வந்தது. அட! இது தான் என் கோடாரி என்று தங்கமணி துள்ளிக் குதித்தான். தங்கமணி உனது நேர்மையைக் கண்டு மகிழ்ந்தேன். இந்த இரண்டு கோடாரிகளையும்நீயே வைத்துக்கொள் என்று கூறி தேவதை மறைந்தது. தங்கமணி மூன்று கோடாரிகளுடனும் மகிழ்ச்சியாக வீட்டிற்குச் சென்றான். மறுநாள் தன் நண்பன் சின்னமணியிடம் நடந்த நிகழ்வுகளைக் கூறினான். உடனே சின்னமணியும் கோடாரியுடன் காட்டிற்குச் சென்றான். வேண்டுமென்றே கோடாரியை ஆற்றில் வீசி அழ ஆரம்பித்தான். தேவதை தோன்றியவுடன் தனது கோடாரி ஏரியில் விழுந்ததைக் கூறினான். ஏரியினுள் சென்ற தேவதை இரும்புக்கோடாரியுடன் வந்தது. இல்லை! இல்லை! இது என் கோடாரி இல்லை என்றான் சின்னமணி. உடனே தேவதை சிரித்துக்கொண்டே ஏரியினுள் மறைந்தது. சின்னமணி தேவதை வரும் என்று காத்திருந்தான். ஆனால் தேவதை வரவில்லை.

சின்னமணி அப்போது தான் தன் தவறை உணர்ந்தான். **பேராசை பெரும் நஷ்டம்** என்ற பழமொழியும் அறிந்து கொண்டே வீட்டிற்குச்சென்றான்.

* * *





முல்லை என்னும் ஒரு அழகிய சிற்றூர். அவ்வூரில் மாடன் என்னும் விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் வறுமையினால் மிகவும் வாடினான். அதனால் விவசாயத்துடன் சில வாத்துகளையும் வளர்த்து வந்தான். வாத்துகளின் முட்டையை விற்று பிழைப்பு நடத்தினான். ஒரு நாள் அவனது கொட்டிலில் தங்க நிற வாத்து ஒன்று இருந்தது. அட! தங்க நிற வாத்து! இதை சமைத்து சாப்பிட்டால் எவ்வளவு ருசியாக இருக்கும்! என்று எண்ணிக் கொண்டு பிடிக்க முயன்றான். வாத்து அவன் கையில் பிடிபடாமல் பறந்து பறந்து சென்றது. மாடன் முயற்சி செய்து வாத்தினைப் பிடித்தான். எங்கே! ஓடப் பார்க்கிறாய்! இன்று எனக்கு நல்ல உணவாகப் போகிறாய். அய்யோ! என்னை விட்டு விடு கொன்றுவிடாதே! என்று வாத்து கூறியது. வாத்து பேசுவதை மாடன் ஆச்சர்யத்துடன் பார்த்தான். என்னைக் கொள்ளாமல் விட்டால் தினமும் ஒரு தங்க முட்டைத் தருகிறேன் என்று கூறியது. உன்னை எப்படி நம்புவது. இன்று ஒரு நாள் மட்டும் என்னை உயிரோடு விட்டு விடு. நாளை நான் உனக்கு ஒரு தங்க முட்டைத் தருகிறேன் என்று வாத்து கூறியது. இன்று ஒரு நாள் மட்டும் தான் நாளை தங்க முட்டை இடவில்லை என்றால் நான் உன்னைக் கொன்று விடுவேன் என்று மாடன் கூறினான். மறு நாள் கொட்டிலில் தங்கமுட்டையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தான். சந்தையில் தங்க முட்டையை நல்ல விலைக்கு விற்றான். சில நாட்கள் சென்றன. தினமும் கிடைத்த தங்க முட்டையினால் அவன் வறுமை நீங்கியது. வாத்து தினமும் ஒரே ஒரு தங்கமுட்டை தான் தருகிறது. அதன் வயிற்றில் எத்தனை முட்டைகள் இருக்கும் என்று நினைத்தான். உடனே வாத்தின் வயிற்றைக் கத்தியால் கீறினான். வாத்து துடிதுடித்து இறந்தது. வயிற்றில் ஒரே ஒரு தங்க முட்டை மட்டுமே இருந்தது.

ஐயோ! என் பேராசையினால் வாத்தினையும் இழந்தேனே! என்று மாடன் கதறி அழுதான். பேராசை பெரு நஷ்டம் என்ற பாடத்தையும் புரிந்து கொண்டான்.

* * *



# தாகம் தீர்ந்த காகம்



ஒரு நாள் காகம் காட்டுப் பக்கமாக இரைதேடச் சென்றது. அப்போது வழி தவறி நீர் நிலையற்ற பாலைவனப் பகுதியை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் காகத்திற்கு தாகம் எடுத்தது. பாலைவனப் பகுதி ஆதலால் அங்கு வெயிலின் தாக்கம் மிக அதிகமாக இருந்தது. காகத்திற்கு வேகமாக பறக்கவும் முடியவில்லை. தாகத்தினால் களைப்படைந்து காணப் பட்டது. எங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா என்று வானில் பறந்து கொண்டே வந்தது. அதற்கு எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. சற்று தொலைவில் ஒரு மண் குவளையில் சிறிது தண்ணீர் இருந்தது. தண்ணீரைக் கண்ட காகம் வேகமாக இறங்கி வந்தது. தண்ணீர் குவளையின் அடிப்பகுதியில் இருந்தது. காகம் தனது அலகினைக் கொண்டு எவ்வளவு முயற்சி செய்தும் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை. காகம் சிறிது நேரம் சிந்தித்தது. மண்குவளையின் அருகே சிறு சிறு கற்கள் கிடந்ததைப் பார்த்தது. அதற்கு ஒரு திட்டம் தோன்றியது. கற்களை ஒவ்வொன்றாக தனது அலகினால் எடுத்து மண்குவளையின் உள்ளே போட்டது. கற்களைப் போடப் போட தண்ணீரின் அளவு மேலே உயர்ந்து கொண்டே வந்தது. இறுதியில் தண்ணீர், மண் குவளையின் வாய்ப்பகுதியை நோக்கி மேலே வந்தது. காகம் தாகம் தீரும் வரை தண்ணீரை நன்கு சுவைத்து குடித்தது. காகம், தன் முயற்சியின் பலனை எண்ணி கூட்டை நோக்கி பறந்து சென்றது. 'முயற்சி உடையார் மகிழ்ச்சி அடைவர்' என்ற கருத்தைக் காகம் நமக்கு நினைவூட்டுகிறது. இதனையே வள்ளுவரும்

**"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும் என்று கூறுகிறார்".**

* * *



நன்னெறிகள் புகட்டும் நற்கதைகள் புத்தி
புகட்டும் பத்து கதைகள் சிங்கத்தை வென்ற எலி,
குல்லா போட்ட குரங்கு, தங்கம் தந்த வாத்து,
தாகம் தீர்த்த காகம், கர்வத்தை அழித்த நரி,
நேர்மை காத்த மரவெட்டிவாழ்வியல் முறையைக்
காத்து நிற்கும்தங்கப் பெட்டகமாய் இந்தச் சிறுவர்
கதை நூல்படித்து மகிழ்வோம்!
வாழ்ந்து காட்டுவோம்!

**இனி சிந்திக்க சிரிக்க தங்களை**
**ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள்!**
**விகடகவியின் விடுகதைகளுக்கு விடை தேட**
**தயாராகுங்கள்! தெனாலியுடன் உங்களை**
**சந்திக்கிறேன்.**




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com